# <u>தூத்துக்குடி நகரமன்றம்</u>
# <u>சாதாரணக் கூட்டப்பொருள்</u>

2006ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10. 00 மணிக்கு தூத்துக்குடி நகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ் பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது

## <u>பொருள்கள்</u>

1. இந்நகராட்சிக்கு சொந்தமான TN 69–5720 லாரியில் தகுதிச் சான்று பணிகள் மற்றும் இதனுடன் இணைந்த பணிகள் செய்ய ஆன செலவீனத்திற்கும், அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் கோரவும் மன்றம் தனது தீர்மானம் எண் 672 நாள் 22–05–2006ல் அனுமதி அளித்ததின் பேரில் 04–11–2006ல் விலைப்புள்ளி கோரப்பட்டது. இதில் மூன்று அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. இவைகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகின்றது. தற்போது கழிவுநீர் அகற்றும் பணி அவசியம் கருதி மேற்படி குடிநீர் லாரியை கழிவுநீர் அகற்றும் பணிக்காக மாற்றியமைத்துக் கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல்ஸ் மற்றும் இஞ்சினியரிங
   ஒர்க்ஸ் 73ஜி/13ஏ போல்பேட்டை, தூத்துக்குடி — ரூ 71,420/–

2. மெசர்ஸ் ஜெய் ஆட்டோ கேரேஜ்
   4/89எப் கால்டுவெல் காலனி, தூத்துக்குடி — ரூ 71,700/–

3. மெசர்ஸ் ஆர்.என்.ஆர். மெக்கானிக்கல் ஒர்க்ஸ்
   6/4 சிதம்பரநகர், தூத்துக்குடி — ரூ 66,800/–

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. கழிவுநீர் அகற்றும் பணிக்கு கூடுதல் வாகனம் தேவைப்படுவதால் மேற்படி லாரியை மாற்றம் செய்து கொள்ளவும், செலவீனத்திற்கும் அனுமதி அளிக்கலாம்.

2. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் ஆர்.என்.ஆர். மெக்கானிக்கல் ஒர்க்ஸ் நிறுவனத்தை ஏற்று அனுமதிக்கலாம்.

3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கி பணிகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகஎண் இ1. 018774/06**

**தீர்மான எண் 1019 நாள் 17–11–2006**
**அலுவலக குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது.**

2. இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதி 34 மற்றும் 35வது வார்டு பகுதி ஜார்ஜ் ரோடு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் பழுதடைந்துள்ளது. மேலும் வடிகால் சுவர்கள் சாலையை விட தாழ்வாக உள்ளதால். மழைநீர் கழிவுநீர் சாலையில் தேங்கி விடுகிறது. இதனால் மக்கள் போக்குவரத்திற்கு இடையூராக உள்ளது. எனவே இந்த பணி செய்ய மதிப்பீடு ரூ 3,25,000/–க்கு தயாரிக்கப்பட்டு மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

மேலும் தற்போது அவ்விடத்தில் உள்ள வடிகால் உயர்த்தி கட்டுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ 3,25,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

அனுமதிக்கலாம். மேலும் கீழ்க்கண்ட பணியினை SJSRY திட்டத்தின் கீழ் நகர்புற வேலைவாய்ப்புத்திட்டத்தின் கீழ் இப்பணியினை செய்ய அனுமதிக்கலாம்.

மேலும் அரசு அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் உள்ள தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் அனுமதிக்கலாம்.

**மபஎண் 103/2006–07**

**தீர்மான எண் 1020 நாள் 17–11–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

3. இந்நகராட்சிப் பள்ளியில் சத்துணவு மையத்தில் சமையல் உதவியாளராக பணிபுரிந்து 31–1–2005ம் தேதியில் ஓய்வுபெற்ற திருமதி காந்தி கிருஷ்ணம்மை என்பவரின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதித் தொகை ரூ 1600/– , வட்டித்தொகை ரூ 505/– நகராட்சி பங்குத்தொகை ரூ 5000/– ஆக மொத்தம் ரூ 7105/–ஐ அன்னாருக்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**பி2. 15096/06**

**தீர்மான எண் 1021 நாள் 17–11–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

4. இந்நகராட்சி பகுதிக்குட்பட்ட பகுதி 1வது வார்டு குறிஞ்சி நகர் 3வது, 4வது, 7,வது தெருக்கள் போல்பேட்டை மேற்கு மற்றும் கிழக்கு ஸ்டேட் பாஙக் காலனி கோமதிபாய் காலனி ஆகிய சாலையில் மழை காலத்தில் தண்ணீர் தேஙகி போக்குவரத்திற்கு இடையூராக உள்ளது. எனவே அஙகுள்ள பள்ளஙகளில் கிராவல் நிரப்புவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5000/–க்கு மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட பணியினை இந்நகராட்சி பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர் திரு வேலுச்சாமி மதிப்பீடு ரேட் விகிதத்தில் ஒப்படைத்து செய்து பணியினை முடிக்கலாம்.

**மபண் 104/2006–07**

**தீர்மான எண் 1022 நாள் 17–11–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

5. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு ஆய்வாளராக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 31–12–2005ம் தேதி ஓய்வுபெற்ற திரு இ.ஜே. ஜேக்கப் என்பவருக்கு அன்னாரின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ 2560/– வட்டித்தொகை ரூ 5446/– மற்றும் அரசு மானியம் ரூ 5000/– ஆக மொத்தம் ரூ 13006/– (ரூபாய் பதிமூன்றாயிரத்து ஆறு மட்டும்) நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

குறிப்பு அனுமதிக்கலாம்.

**எச்1. 7774/2006**

**தீர்மான எண் 1023 நாள் 17–11–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

6. இந்நகராட்சி நகரமன்ற உறுப்பினர் தேர்தல் கடந்த 13–10–2006 அன்று நடைபெற்றதில் வார்டு எண் 37ல் சுயேட்சை வேட்பாளரான திரு எஸ். மாடசாமி என்பவர் வெற்றி பெற்றுள்ளார். அன்னாரது வெற்றி செல்லத் தக்கதல்ல என்று அறிவிக்க கோரியும், வாக்கு எண்ணிக்கை திரும்ப செய்ய வேண்டும் என்று கேட்டு தூத்துக்குடி மாவட்ட நீதிமன்றத்தில் எலக்ஷன் ஓபி 200/06 எண்ணில் திருமதி லதா செளந்திரபாண்டியன் என்பவர் வழக்கு தொடுத்துள்ளார். இவ்வழக்கில் தேர்தல் அதிகாரி நகராட்சி ஆணையரை 7வது எதிர் மனுதாரராக சேர்த்துள்ளதால் இவ்வழக்கை எதிர்த்து நகராட்சி சார்பாக வழக்காட நகரமன்ற வழக்கறிஞரை கேட்டுக்கொள்ளவும், அதற்கான செலவினஙகளுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :அனுமதிக்கலாம்.

**சி1. 18807/2006**

**தீர்மான எண் 1024 நாள் 17–11–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

7. இந்நகரின் பல இடஙகளில் குடிநீர் பகிர்மான குழாய்கள் உடைப்பு மற்றும் சாக்கடை நீர் கலந்து வருவதால் இதனை உடனடியாக சரி செய்வதற்கு மண் வெட்டும் பணிக்கு தினக்கூலி பணியாளர்கள் இல்லை. எனவே மண் தோண்டும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 20000/– க்கு தயாரித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப் படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : அனுமதிக்கலாம்.

**ம.ப.எண். 102/2006/07**

**தீர்மான எண் 1025 நாள் 17–11–2006**
**<u>அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.</u>**

8. இந்நகராட்சியில் உள்ள 51 வார்டுகளில் தற்போது 20 வார்டுகள் நான்கு மண்டலஙகளாக பிரிக்கப்பட்டு அவை தனியார் மூலம் துப்புரவு பணிகள் 21/11/2003 முதல் நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 31 வார்டுகளில் நகராட்சி துப்புரவுப் பணியாளர்கள் மூலம் துப்புரவு பணி நடைபெறுகிறது. தனியார் மூலம் செய்யப்படும் துப்புரவு பணிக்கான மூன்றாண்டு கால ஒப்பந்தம் வருகின்ற 20/11/2006ம் தேதியுடன் முடிவடைகிறது.

அ) கடந்த இரண்டு மாதஙகளாக உள்ளாட்சி தேர்தல் பணி நடை பெற்றதாலும், மன்ற கூட்டஙகள் நடை பெறாததாலும் புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்ய இயலவில்லை. எனவே புதிய ஒப்பந்ததாரைத் தேர்வு செய்ய ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ஆ) ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று மன்றத்தின் முடிவுக்கு வைத்து புதிய ஒப்பந்ததாரரை நியமனம் செய்ய குறைந்தது இரண்டு மாத காலம் ஆகும் என்பதாலும் நகராட்சி துப்புரவு ஆய்வர்கள், மேற்பார்வையாளர்கள், துப்புரவு பணியாளர்கள் மிகவும் குறைவாக இருப்பதாலும் தனியார் மூலம் குப்பை அள்ளும் பணிக்கு ஒப்பந்ததாரரை நியமனம் செய்யும் வரை தனியார் மூலம் துப்புரவு பணியினை நீட்டித்து வைத்துக் கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

இ) தற்போது முதல் மற்றும் மூன்றாவது மண்டலஙகளில் துப்புரவு பணி ஒப்படைக்கப்பட்டிருக்கும் ஒப்பந்ததாரர்கள் துப்புரவு பணியினை ஒப்பந்தத்தில் கண்டுள்ள நிபந்தனைகளின்படி முதல் மண்டலத்தில் திரு உதயக்குமார் 14/09/06 முதல் 20/09/06 வரையும் 21/10/06 முதல் 27/10/06 வரையும் துப்புரவுப் பணி நடை பெறவில்லை. செப்டம்பர் 2006 முதல் பணிக்கு தேவையான ஆட்களை அனுப்பாமலும், குப்பையை அப்புறப்படுத்தாமலும் அப்பகுதி முழுமையும் சுகாதார கேடு ஏற்பட்டு விட்டது. அதே போல் மூன்றாவது மண்டலத்திற்கான ஒப்பந்ததாரரான திரு அப்துல் ரசாக், தென்காசி என்பவரும் போதுமான பணியாளர்களை நியமிக்காமல் செப்டம்பர் 2006 முதல் நகரின் முக்கிய பகுதிகளில் துப்புரவு பணி பாதிக்கப்பட்டு பொது மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி விட்டனர். இந்த இரு ஒப்பந்ததாரர்களின் செயல்பாடுகளினால் பொது மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மக்கள் பிரதிகளான நகர்மன்ற உறுப்பினர்களும் தஙகளது அதிருப்தியினை அவ்வப்போது வெளிபடுத்தியுள்ளனர்.

எனவே மண்டலம் 2ல் உள்ள ஒப்பந்ததாரர் திருமதி விக்டோரியா என்பவர் இது நாள் வரை தனியார் மூலம் செய்யப்படும் துப்புரவு பணியினை எந்தவித புகாருமின்றி சிறப்பாக செய்து வந்துள்ளார். எனவே புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்து நியமனம் செய்யும் வரை இரண்டாவது மண்டலத்தின் ஒப்பந்ததாரர் தாம் கவனித்து வரும் இரண்டாவது மண்டலத்துடன் அவர் சம்மதிக்கும் பட்சத்தில் முதலாவது மற்றும் மூன்றாவது மண்டலஙகளின் துப்புரவு பணியினையும் அந்தந்த மண்டலஙகளின் தற்போதைய ஒப்பந்தப்புள்ளி விலைக்கே செய்து வரக் கேட்டுக்கொள்ளலாம். அவ்வாறு ஒப்புக்கொள்ளும் நிலையில் மண்டலம் 2ன் ஒப்பந்ததாரர் துப்புரவு பணியினை மறு ஒப்பந்ததாரர் நியமனம் செய்யும் வரை செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**:

**அ)** அனுமதிக்கலாம்

ஆ)புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்யும் வரை இரண்டாவது மற்றும் நான்காவது மண்டல ஒப்பந்ததாரரை நீட்டித்து வைத்துக்கொள்ளலாம்

இ) புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்யும் வரை மண்டலம் 2ன் ஒப்பந்ததாரர், மண்டலம் ஒன்று மற்றும் மூன்றுக்குரிய ஒப்பந்தப்புள்ளி விலைக்கே ஒப்புதல் வழஙகும் நிலையில் பணி செய்ய அனுமதிக்கலாம்.

**எச்3. 7852/2003**

**தீர்மான எண் 1026 நாள் 17–11–2006**
**அலுவலகக்குறிப்பு அ, ஆ மற்றும் இ அனுமதிக்கப்பட்டது.**

9. இந்நகராட்சி நகர்மன்ற தீர்மானம் எண் 598 நாள் 31–1–2006 இந்நகராட்சி தெருவிளக்கு பராமரிப்புக்கு ரூ 18.71 இலட்சத்திற்கு மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. கூடுதல் ஆன செலவுத்தொகை ரூ 13,965/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவவகக் குறிப்பு:</u> **மன்றம் அனுமதிக்கலாம்.**

**இ3. 16741/05**

**தீர்மான எண் 1027 நாள் 17–11–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

10) இந்நகராட்சிக்குட்பட்ட இராஜாஜி பூஙகா நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள 25 கு.வேக திறன் மின் மோட்டாரின் (லெவஞ்சிபுரம் மேல்நிலை

நீர்த்தேக்கத்தொட்டிக்கு தண்ணீர் ஏற்றக்கூடியது) ஸ்டேட்டர் வைண்டிங எரிந்து போன நிலையில் உள்ளது. மேற்படி மோட்டாரை உடன் ரீவைண்டிங செய்வதற்கும், மேற்படி வேலையை செய்ய அதற்குரிய உத்தேச செலவுத்தொகை ரூ 10,000/–க்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**இ3.017836/06**

**தீர்மான எண் 1028 நாள் 17–11–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

**11.** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு துப்புரவு பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள், வாகன ஓட்டுநர்கள், தினக்கூலி பணியாளர்களுக்கு 2006ம் வருடத்திற்கான சீருடை வழஙக உத்தேச செலவுத்தொகை ரூ 6.00 இலட்சத்திற்கும், சீருடைகளை திருநெல்வேலி கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திலிருந்து வாஙகவும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு** : அனுமதிக்கலாம்.

**எச்3. 92/2006**

**தீர்மான எண் 1029 நாள் 17–11–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

**12.** இந்நகராட்சிப் பகுதியில் சாலையில் தேஙகி உள்ள தண்ணீர் மற்றும் கழிவு நீர் அகற்றம் பணிகளுக்க தேவையான இஞ்சின் மற்றும் இணைந்த பொருட்களுக்கான உத்தேச செலவினம் ரூ 47000/–க்கும் இவைகளை வாஙகி பயன்படுத்திக்கொள்ளவும் உத்தேச செலவினத்திற்கும் அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு: 1. மழை கால பராமரிப்பிற்கு மேற்படி பொருட்கள் அவசியம் தேவை என்பதால் இவைகளை வாஙகி பயன்படுத்திக்கொள்ளவும் தோராய செயனம் ரூ 47000/–க்கும் பொது நிதியிலிருந்து வழஙகவும் அனுமதி அளிக்கலாம்.

**இ1. 019400/2006**

**தீர்மான எண் 1030 நாள் 17–11–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

**13.** இந்நகராட்சிக்கு சொந்தமான TN **69– 5737** குடிநீர் லாரியில் தகுதிச் சான்று பணிகள் செய்ய ஆகும் செலவீனத்திற்கும், அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் கோரவும் மன்றம் தனது தீர்மானம் எண் **672** நாள் **22–5–06**ல் கோரப்பட்டது. இதில் மூன்று அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. இவைகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மெசர்ஸ் ஆர்என்ஆர் மெக்கானிக்கல் ஒர்க்ஸ், சிதம்பரநகர், தூத்துக்குடி | ரூ 38,900/– |
| மெசர்ஸ் ஜெய் ஆட்டோ கேரேஜ், கால்டுவெல் காலனி, தூத்துக்குடி | ரூ 36,800/– |
| மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல் அண்ட் இஞ்சினியரிங ஒர்க்ஸ், போல்பேட்டை, தூத்துக்குடி | ரூ 33,450/– |

**அலுவலகக் குறிப்பு**

1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல்ஸ் அண்ட் இஞ்சினியரிங ஒர்க்ஸ் நிறுவனத்தினரை ஏற்று அனுமதிக்கலாம்.

**இ1. 015147/2006**

**தீர்மான எண் 1031 நாள் 17–11–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

**14.** உறுப்பினர் செயலர் நகர் ஊரமைப்பு வாரியக்குழு மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண் நகஎண் **12463/05**/யுபி**1** நாள் **6–10–2006**ன்படி ஆரம்ப முதலீட்டு நிதி உதவித்திட்டத்தின் கீழ் **5** சாலைகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்தின் கீழ் அரசு மானியம் ரூ **20/–** லட்சம் மற்றும் இந்நகராட்சி பொது நிதி ரூ **40.40** லட்சம் செலவு செய்ய வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறையில் சாலை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு ரூ **186** லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது,. அதில் அரசு மானியம் ரூ **80/–** லட்சம் டுபிட்கோ சொந்த நிதி ரூ **20/–** லட்சம் நகராட்சி பொது நிதி ரூ **86/–** லட்சம் செலவு செய்வதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்தில் தொகை ரூ **86/–** லட்சம் பொது நிதியிலிருந்து எடுத்துக் கொள்ளப்படும். சாலை மேம்பாட்டுப் பணிகள் அல்லது ஆரம்ப முதலீட்டு திட்டத்தின் கீழ் சாலை போக்குவரத்து திட்டத்தில் பணிகள் எடுக்கப்பட்டால் கீழ்க்கண்ட

பணிகளை சாலை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யலாம் என சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் ஆரம்ப முதலீடு திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட 5 பணிகளில் 4 பணிகள் பொது நிதியின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி மேற்கண்ட விபரஙகள் தெரிவித்து இந்நகரமன்ற தீர்மான எண் 1506 நாள் 21–3–2005க்கு திருத்திய தீர்மானம் பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**இ1. 3011/05**

**தீர்மான எண் 1032 நாள் 17–11–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

15. தூத்துக்குடி நகராட்சிப் பகுதியில் சாலைகள், வடிகால் குடிநீர் விநியோகம் மரம் மற்றும் பூஙகா அபிவிருத்தி செய்யும் பணிகள் UIDSSMT திட்டத்தின் கீழ் செய்வதற்கு டுபிட்கோ நிதி நிறுவன மேலாண்மை இயக்குநர் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி தயாரிக்கப்பட்ட பிரேரணைக்கு மன்றம் தனது தீர்மான எண் 570 நாள் 13–1–2006ம் தேதிபடி ஒப்புதல் அளித்து அனுப்பப்பட்டுள்ளது.

மன்றம் தனது தீர்மானம் எண் 621 நாள் 31–1–2006ன்படி அடிப்படை வசதி பணிகளை கருத்தில் கொண்டு சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளை முதற்கட்டமாக டுபிட்கோ சொந்த நிதியிலிருந்து நிதியை அனுமதிக்கவும், பின்னர் கீழ்க்கண்ட திட்டம் அனுமதிக்கும் பட்சத்தில் அதனை ஈடு செய்யவும் அதன் அடிப்படையில் மேற்கண்ட பணிகள் டுபிட்கோ சொந்த நிதியிலிருந்து அனுமதிக்கப்பட்டது. மன்றம் தனது தீர்மான எண் 622 நாள் 7–2–2006ம் தேதியில் கீழ்க்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| <u>பணிகள் விபரம்</u> | <u>மதிப்பீட்டுத்தொகை</u> |
|---|---|
| 1. டுவிபுரம் 3ம்தெரு தார்சாலை அமைத்தல் | ரூ 12.7 லட்சம் |
| 2. அண்ணாநகர் டோபிகானா சந்திப்பு முதல் டிஎம்பி காலனி பிரதான சாலை வரை தார்சாலை அமைத்தல் | ரூ 9.5 லட்சம் |
| 3. தெற்கு ராஜா மற்றும் பிரெஞ்ச் சாப்பல் ரோடு தார்சாலை அமைத்தல் | ரூ 5.6 லட்சம் |
| 4. மில்லர்புரம் பிரதான சாலை அமைத்தல் | ரூ 12.9 லட்சம் |

5. மில்லர்புரம் பகுதியில் தார்சாலை அமைத்தல் ரூ 7.45 லட்சம்

6. சிதம்பரநகர் பிரதான மற்றும் குறுக்குச்சாலை தார்சாலை அமைத்தல் ரூ 6.25 லட்சம்

7. பெருமாள்புரம்பிரதான சாலை மற்றும் குறுக்குச்சாலை தார்சாலைஅமைத்தல் ரூ 7.30 லட்சம்

8. டூவிபுரம் 2ம் தெரு முதல் 5ம்தெரு மற்றும் 9ம் தெரு தார்சாலை அமைத்தல் ரூ 7.30 லட்சம்

9. அண்ணாநகர் 8ம் தெரு தார்சாலை அமைத்தல் ரூ 5.40 லட்சம்

10. அண்ணாநகர் 10ம் தெரு தார்சாலை அமைத்தல் ரூ 4.40 லட்சம்

11. அண்ணாநகர் 11ம் தெரு தார்சாலை அமைத்தல் ரூ 3.00 லட்சம்

12. மேலச் சண்முகபுரம் முதல் தெரு தார்சாலை அமைத்தல் ரூ 4.35 லட்சம்

13. செவந்தாகுளம் ரோடு தார்சாலை அமைத்தல் ரூ 7.40 லட்சம்

14. லையன்ஸ் டவுண் வடக்கு தெற்கு பிரதான சாலையிலிருந்து லையன்ஸ் டவுண் 1ம் தெரு முதல் 7ம் தெரு வரை இணைப்பு சாலை வரை தார்சாலை அமைத்தல் ரூ 12.00 லட்சம்

15. சேதுராஜாத் தெரு, அய்யலு தெரு, கிருஷ்ணராஜபுரம் சந்தணமாரியம்மன் கோவில் தெருக்களில் வடிகால் ஓடை மற்றும் தார்சாலை அமைத்தல் ரூ 12.00 லட்சம்

16. மேலரதவீதி மற்றும் வடக்கு ரதவீதி வடிகால் ஓடை மற்றும் தார்சாலைஅமைத்தல் ரூ 14.25 லட்சம்

17. சிவன்கோவில் தெருவில் வடிகால் ஓடை மற்றும் தார்சாலை அமைத்தல் ரூ 15.50 லட்சம்

18. தெற்கு சம்பந்தமூர்த்தி மற்றும் வடக்கு சம்பந்தமூர்த்தி தெரு வடிகால் ஓடை மற்றும் தார்சாலை அமைத்தல் ரூ 9.30 லட்சம்

19. ஜெயிலானித்தெருவில் வடிகால் ஓடை மற்றும் தார்சாலை அமைத்தல் ரூ 15.30 லட்சம்

20. சத்திரம் தெருவில் தார்சாலை அமைத்தல் ரூ 8.05 லட்சம்

21. தந்தி ஆபீஸ் ரோட்டில் வடிகால் ஓடை மற்றும் தார்சாலை அமைத்தல் ரூ 7.00 லட்சம்

22. பெரிய கடைத்தெரு, பீட்டர் கோவில் தெரு, ராட்டைக் கழகம் தெரு தார்சாலை அமைத்தல் ரூ 8.85 லட்சம்

23. பண்டு கரை ரோட்டில் தார்சாலை அமைத்தல் ரூ 7.65 லட்சம்

24. டோபிகானா சாலை தார்சாலை அமைத்தல் ரூ 8.85 லட்சம்

25. எஸ்.எஸ். தெருவில் தார்சாலைஅமைத்தல் ரூ 5.60 லட்சம்

26. தச்சர் தெருவில் தார்சாலைஅமைத்தல் ரூ 13.60 லட்சம்

27.டேவிஸ்புரம் மேற்குத். தெருவில் தார்சாலைஅமைத்தல் ரூ 9.95 லட்சம்

28.டேவிஸ்புரம் கிழக்குத் தெருவில் தார்சாலைஅமைத்தல் ரூ 13.10 லட்சம்

29. நாட்டுக்கோட்டை தெருவில் தார்சாலைஅமைத்தல் ரூ 8.25 லட்சம்

30. சந்தை ரோட்டில் தார்சாலைஅமைத்தல் ரூ 8.25 லட்சம்

31. நந்தகோபாலபுரத்தில் தார்சாலை அமைத்தல் ரூ 7.25 லட்சம்

32. ஸ்டேட் பாங்க் காலனி கிழக்கு ரோட்டில் தார்சாலைஅமைத்தல் ரூ 9.25 லட்சம்

33. ஸ்டேட் பாங்க் காலனி மேற்கு ரோட்டில் தார்சாலைஅமைத்தல் ரூ 8.5 லட்சம்

34. போல்பேட்டை 60' ரோட்டில் தார்சாலை அமைத்தல் ரூ13.5 லட்சம்

35. டுவிபுரம் 2ம் தெருவில் தார்சாலைஅமைத்தல் ரூ 10.00 லட்சம்

36. கிருஷ்ணராஜபுரம் தெருவில் தார்சாலை அமைத்தல் ரூ 10.00 லட்சம்

தற்போது மேலாண்மை இயக்குநர் டுபிட்கோ அவர்களின் க.எண் ந. நி/தி.ஒ.ஆ/உ.மே (வி) 06 நாள் 12–9–2006ம் தேதிய கடிதத்தில் UIDSSMT திட்டத்தின் கீழ் சாலை பணித்திட்டம் மேற்கண்ட பணிகளுக்கு ரூ 328/– லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்கண்ட திட்டத்தின் கீழ் மன்றத் தீர்மான எண் 622 நாள் 7–2–2006ம் தேதியில் தெரிவித்துள்ள அதே பணிகள் எடுத்துச் செய்வதற்கும் அதற்குரிய தொகையினை UIDSSMT திட்டத்தில் ஈடு செய்வதற்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம். **இ1.3011/05**

**தீர்மான எண் 1033 நாள் 17–11–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

**16.** இந்நகராட்சி 6, 15, 29, 51வது வார்டு நகரமன்ற உறுப்பினர் அவர்களால் தூத்துக்குடி நகர்ப்பகுதி மில்லர்புரத்திலுள்ள வாட்டர் டேங்க் அமைந்துள்ள பூஙகாவிற்கு முன்னாள் நகரமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தியாகி திரு பொன்னுச்சாமி நாடார் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அன்னாரது பெயரை மேற்படி மில்லர்புரம் வாட்டர் டேங்க் பூஙகாவிற்கு வைக்க அனுமதி கோரப்பட்டுள்ளது. மேற்படி கருத்துருவினை அரசின் அனுமதி பெறவும் உத்திரவுக்கும் அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.

**ஜி1. 19429/06**

**தீர்மான எண் 1034 நாள் 17—11—2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

**17.** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கோரிக்கையில் தூத்துக்குடி நகராட்சியில் நவீன சுடுகாடு அமைக்கும் திட்டம் நிறைவேற்ற கோரியுள்ளார். இதனை தொடர்ந்து இந்நகராட்சியின் part II திட்டத்தின் கீழ் (50% சதவீதம் மானியம் 50% சதவீதம் நகராட்சி பஙகு) நவீன சுடுகாடு அமைக்கும் திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மதிப்பீடு ரூ 40.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளபடி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். மேலும் அரசு ஒதுக்கீடு செய்யும் தொகைக்கு மேல்
உள்ள கூடுதல் செலவினம் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மேலும்
மேற்கண்ட பணிக்குரிய நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம்
அனுமதி பெறலாம்.

இ1. 19231/06

**தீர்மான எண் 1035 நாள் 17—11—2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

**18.** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கோரிக்கையில் .தூத்துக்குடி நகராட்சியில் நவீன ஆடு வதைக்கும் இடம் கட்டும் திட்டம் நிறைவேற்ற

கோரியுள்ளார். இதனை தொடர்ந்து இந்நகராட்சியின் part II திட்டத்தின் கீழ் (50% சதவீதம் மானியம் 50% சதவீதம் நகராட்சி பங்கு) நவீன ஆடு வதைக்கும் இடம் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மதிப்பீடு ரூ 20.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளபடி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். மேலும் அரசு ஒதுக்கீடு செய்யும் தொகைக்கு மேல்

உள்ள கூடுதல் செலவினம் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மேலும்

மேற்கண்ட பணிக்குரிய நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம்

அனுமதி பெறலாம்.

இ1. 19231/06

**தீர்மான எண் 1036 நாள் 17–11–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

**19.** இந்நகராட்சி நகர்மன்ற வழக்கறிஞராக திரு யூ.எஸ். சேகர் என்பவர் 1–6–2004 முதல் பணி செய்து வருகின்றார். அன்னாரின் வழக்கறிஞர் பணி 31–5–2007ல் முடிவடைய உள்ளது. மேற்படி நகரமன்ற வழக்கறிஞர் பணி செய்ய திரு என்.செல்வராஜ் என்பவர் 8–11–2006ல் விண்ணப்பித்துள்ளார்.

எனவே மேற்படி வழக்கறிஞர் திரு என். செல்வராஜ் அவர்களை நகரமன்ற வழக்கறிஞராக நியமனம் செய்வது குறித்து அன்னாரின் 8–11–2006ம் தேதிய விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் பரிசீலனை செய்து முடிவு செய்யலாம்.

சி1. 13512/2004

**தீர்மான எண் 1037 நாள் 17–11–2006**
**வழக்கறிஞர் திரு.என்.செல்வராஜ் அவர்களை நகர்மன்ற வழக்கறிஞராக நியமனம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.**

தலைவர்,
நகர்மன்றம், தூத்துக்குடி